பாம்பன் ஸ்வாமிகள் பாதமலர்கள் போற்றி

# சண்முக கவசம்

ஆன்மிகப் பல்சுவைத் திங்களிதழ்

டிசம்பர் 2013 ❁ விலை ரூ. 15/-



**கந்தன்குடி கந்தன்,**
நாகை மாவட்டம்

# இறைவழிபாட்டில் நாம் பெரிதும் வேண்டுவது இகபர சௌக்கியமா? அல்லது திருவடி சௌக்கியமா?

உலகத்தில் தோன்றிய உயிர்கள், தம்முடைய வாழ்நாளை தாம் என்ன செய்யவேண்டும் என்று நினைக்கின்றனவோ அதைச் செய்துவிட்டு அதன் முடிவு தெரியாமல் இந்த உலகத்தை விட்டு அழிந்துவிடுகின்றன. ஓர் அறிவு கொண்ட மரம், செடி மற்றும் கொடிகள் பூமியில் முளைத்து, பின்பு அவை வளர்ந்து மரமாகவோ அல்லது செடியாகவோ மாறி அதில் இருந்து காய்கனிகளைத் தந்து இறுதியில் இயற்கை சீற்றத்தால் அல்லது மனிதன் செய்கின்ற செயல்பாட்டினால் அவை வெட்டப்பட்டு அழிக்கப்படுகின்றன. இதுபோல இரண்டு அறிவு, மூன்று அறிவு, நான்கு அறிவு மற்றும் ஐந்து அறிவுகள் கொண்ட உயிர் இனங்கள் அழிந்து விடுகின்றன. ஆறாம் அறிவு கொண்டு இருக்கின்ற நமக்கும் இதே நிலைமைதான்.

மனிதர்களாகிய நாம் பிறப்பதும், வாழ்வதும், இறப்பதும் என்பது ஓர் இயற்கையான விதிமுறையாக இருக்கலாம். ஆனால் இந்த பூமியில் பிறந்து, வாழ்ந்தும், இறக்காமல் நம்மிடையே இருக்கின்ற ஞானியர் பலர். ஏன் இவர்களுக்கு மட்டும் இறப்பு இல்லை? சற்று சிந்திக்க வேண்டிய ஒன்று.

இறப்பு என்பது இரண்டு வகைப்படும். ஒன்று உயிர் உடலில் தங்க முடியாமல் வெளியேறுவது. மற்றொன்று உடல் பத்திரமாக பூமியில் வைக்கப்பட்டு சாயுச்சிய நிலையில் அருஉருவமாக இருப்பது. அந்த வகையில் பல ஞானியர் இருந்தாலும் உதாரணமாக மாத்துவர் வழியில் பிறந்த ஸ்ரீஇராகவேந்திரர் சாயுச்சிய நிலையில் இருந்துகொண்டு நமக்கு அருள்பாலித்துக் கொண்டு இருக்கிறார். அதுபோல சைவ வேளாள மரபில் மனிதனாகப் பிறந்து மகானாக வாழ்ந்து சீவன் முத்தராக நம்மிடையே வாழ்ந்து கொண்டிருப்பவர் அத்தியாச்சிரம சுத்தாத்துவித வைதிக சைவ சித்தாந்த ஞானபானு பாம்பன் ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் ஆவார்.

முருகப் பெருமானை வாழ்நாள் முழுவதும் நினைத்தும், உருகியும், அழுதும் பாடி நமக்கு அவர் கொடுத்த செந்தமிழ் நூல்கள் 6 மண்டலங்கள் மற்றும் 32 வியாசங்கள் ஆகும். அதில் முதல் மண்டலத்தில் 17ஆம் பதிகமாக வருவது சரவணபவானந்தன் என்ற பதிகம் ஆகும். இதில் 10 பாடல்கள் இருக்கின்றன. இதில் பல்வேறு ஆகமச் செய்திகளும், நம் பிறப்பை ஒழிக்கும் உபாயமும், துன்பத்தைத் தவிர்க்க நாம் எதைச் செய்யவேண்டும் என்பதையும் பட்டியல் போட்டு நமக்குச் சொல்லுகிறார்.



முருகனை வழிபட்டு பல வரங்களை வேண்டிப் பெற்றுக்கொண்டு வாழ நினைப்பவர்கள் ஒருசாரார். மற்றொரு சாரார் முருகனை வழிபட்டு, உலக ஆசையில் இருந்து விடுபடுவதும் மற்றும் அவனுடைய திருவடியினால் கிடைக்கும் இன்பம் ஒன்று மட்டுமே போதும் என்றும் வாழ நினைப்பவர்கள். இந்த இரண்டாவது வகையைச் சார்ந்தவர் நம் குருநாதர் ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் ஆவர்.

சிவத்தமிழ் குகமணி தெ.தனபால்
ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி ஆசிரியர்
Email : thiruppalli@yahoo.com Cell : 9444958526

சுவாமிகள் நம்மைப்போல் இல்வாழ்கையில் இருந்த போதிலும், சுவாமிகளுக்கு அதிக நாட்டம் துறவறம் மேற்கொள்வதிலும், உலக ஆசையிலிருந்து விடுபட்டு இருக்கவும், முருகனின் திருவடியின் நினைப்பும் அதிகமாக இருந்தது. சுவாமிகள் நம் தமிழ்நாட்டில் - இராமேஸ்வரத்தில் உள்ள பாம்பன் என்னும் சிற்றூரில் பிறந்தவர். செல்வச் செழிப்பு உள்ள ஒரு சைவ வேளாள மரபில் பிறந்தவர். இவர் சிறுவயதிலேயே ஆன்மிக நெறிகளைக் கையாண்டவர். இவருடைய வாழ்க்கை சுருக்கத்தை மெய்யடியார்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் www.pambanswamigal.org என்ற இணையதளத்தில் "திருப்பள்ளியெழுச்சி" என்ற தலைப்பில் சென்றால், அவர்களுடைய இறை சிந்தனைகளையும், அறம் தவறாத நிலைகளையும் எழுத்து மூலமாகவும், பாடல்கள் மூலமும் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

இனி, சுவாமிகள் சரவணபவானந்தன் பதிகத்தில் என்ன தகவல்கள் நமக்குக் கொடுக்கிறார் என்று பார்ப்போம். இப்பதிகத்தில் தலைப்பிலேயே "சரவணபவானந்தன்" என்பதில் சரவணனின் நினைப்பே நமக்கு ஆனந்தம் தரும் என்பது ஒரு கருத்து. நம்முடைய வாழ்க்கையில் துக்கம் நீங்க வேண்டும் என்றால் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை சங்கிலிபோல் நமக்கு உணர்த்துகிறார்.

இம்மையில் துய்க்கும் இன்பமே உண்மை இன்பம் எனத் தேனை மிகுதியாக உண்டு அத்தேனில் வீழ்ந்து மாண்டுபோகும் வண்டுகள்

போல், உலக இன்பங்களை மிகுதியாக அனுபவிப்பதிலேயே அதிக நாட்டம் கொண்டு அனுபவித்து நாம் வீணே மடிந்து போகிறோம். இவற்றை அனுபவிக்கும் ஆசையால் நமக்குத் தீவினைகளே வளருகின்றன. இறைவன் நம்மை உய்வித்தற்காக ஐந்தொழில் புரிகின்றான். நாமோ நம்மை நாமே கெடுத்துக் கொள்வதற்கு பதினான்கு தீவினைகளைச் செய்து கொண்டே இருக்கிறோம். சுவாமிகள் அருளிய இப்பாடலைப் படித்து புரிந்து கொள்வது என்பது சிரமம். ஆகையால், அடியேனுக்கு சுவாமிகளின் பாடல்களை உணர்த்திய – பேராசிரியர் ப.இராமன் அவர்கள் பொருள் மாறாமல் பதம் பிரித்துக் கொடுத்த பாடலை இப்போது பார்ப்போம். இதோ முதல் பாடல்:

**பரதார நசையால் இராவணன் பட்டனன்**
**பற்றிய துவேஷம் அதனால்**
**பாறினான் இரணியன் படர்காமம் உற்றுஇறப்பு**
**அண்ணினான் நரகாசுரன்**
**மருவிய குரோதத்தினாலே பகாசுரன்**
**மடிந்தனன் உலோபம் அதனால்**
**மாண்டனன் அகித்துவசன் மோகம் ஒன்றால் இரா**
**மன்தந்தை சென்றான் மதப்**
**பிரமையில் கார்த்தவீரியன் உயிர் இழந்தனன்**
**பிழைமலி பொறாமை ஒன்றால்**
**பீடுகெழு சிசுபாலன் உள் ஆவி பொன்றினன்**
**பேசு இவை எல்லாம் உள்ள என்**
**சரிதை ஏதாமோ எனத் துரால் கூர் எனது**
**தாபம் என்று இரியும் எந்தாய்**
**சலனம் அறு மெய்ஞ்ஞான நிமலசுக சன்னியாச**
**சரவண பவானந்தனே.**

அசைவற்ற மெய்யறிவும் குற்றமற்ற பேரின்பத் துறவுமாகவுள்ள சரவணபவானந்தனே! பிறன் மனைவி மீது ஆசை கொண்டதால் இராவணன் அழிந்தான்; துவேஷத்தைக் கொண்டதால் இரணியன் அழிந்தான்; காமத்தினால் நரகாசுரன் இறப்பை அடைந்தான்; குரோதத்தால் பகாசுரன் மடிந்தான்; உலோபத்தால் அரவக் கொடியோன் ஆன துரியோதனன் மாண்டான்; மோகத்தால் இராமன் தந்தை தசரதன் இறந்தான்; செருக்கு மயக்கத்தால் கார்த்த வீரியார்ச்சுனன் உயிர் இழந்தனன்; குற்றமிகுந்த பொறாமையினால் பெருமை பொருந்திய சிசுபாலன் ஆவியை விட்டான்; எம் தந்தையே! இங்குக் கூறப்பட்ட எல்லாத் தீய குணங்களும் உள்ள என் வாழ்வு ஏதாகுமோ எனத் துன்பம் அடையும் எனது துக்கம் என்று ஒழியும்?

**தனக்குவரு கின்றதுயர் பிறருக்கும் வரஎன்று**
**சந்ததம் நினைந்த அருணாட்சன்**
**சடமிழந் தான் அதேவிதம் பிறர்சுகம்**
**சார்வதோ என்னும் இயல்பின்**
**மனம்மிஞ்சி ஒரு புண்டரீக வசுதேவனும்**
**மடிந்தனன் இடம்பம் ஒன்றால்**
**வாழ்விழந்தான் அம்பரீடன் இவண் எற்கு எவர்ச**
**மானம் என்னும் குணத்தால்**
**கனம்உள சலந்தராசுரன் உயிர் துறந்தனன்**
**கதழ்வு அகங்காரம் அதனால்**
**கறுவும் மதுகைடவர் அழிந்தனர் வரத்தொடு**
**கதித்த பலமும் பெருத்தும்**
**தன்நகு அற்ற இக்குணம் எலாம்உள எற்குஉனது**
**சரணம் எப்படி எய்துமோ**
**சலனம் அறு மெய்ஞ்ஞான நிமலசுக சன்னியாச**
**சரவண பவானந்தனே.**

அசைவற்ற மெய்யறிவும் குற்றமற்ற பேரின்பத் துறவுமாகவுள்ள சரவணபவானந்தனே! வரங்களுடன் பொய் வலிமை மிகுந்திருந்தும், தனக்கு வரும் துன்பம் பிறர்க்கும் வரவேண்டும் என்று எப்போதும் நினைத்து வந்த அருணாட்சன் உடம்பை இழந்தான்; அதே முறையில், மற்றவர் நன்மை அடையலாமோ என்னும் பொறாமைக் குணம் மிகுந்த புண்டரீக வசுதேவனும் இறந்தான்; ஆடம்பரத்தினால் அம்பரீடன் வாழ்வை இழந்தான்; இங்கு எனக்கு எவர் சமம் ஆவர் என்னும் குணத்தால் பெருமையுள்ள சலந்தராசுரன் உயிர் துறந்தான்; உக்கிரமான அகங்காரத்தினால் கோபிக்கும் மது கைடபர் என்னும் இரு அசுரர்கள் அழிந்தனர். தன் மகிழ்ச்சி என்பது இல்லாத இக்குணங்கள் எல்லாம் உள்ள எனக்கு உனது திருவடிகள் எப்படி கிடைக்கும்?

**துக்கம் அது தொலைய என்னில் தேகம் என உள்ள**
**தொக்கு முதல் ஒழிய வேண்டும்**
**தொக்கு முதல் ஒழிய என்னில் சருவ கன்மமும்**
**துஞ்சி அற வேண்டும் அவைகள்**
**விக்கினப் பட எனில் இராகத் துவேஷம் ஆதி**
**வீடல்உற வேண்டும் அவைதாம்**
**வீடஎன்னில் துர் அபிமானம் தொலைந்து கெட**
**வேண்டும் அது போக என்னில்**
**பொக்க அவிவேகம் அது பொன்றல் உற வேண்டும் அது**
**பொன்ற எனில் அஞ்ஞான வல்**
**போய் ஒழிய வேண்டும் அதுபோக எனின் ஆன்மசுக**
**போதம் அது உதிக்க வேண்டும்**
**தக்க புகழுடைய என் அப்ப இதை நான் இனிச்**
**சார்வது என் அருள் துறந்தோ**
**சலனம் அறு மெய்ஞ்ஞான நிமலசுக சன்னியாச**
**சரவணபவ ஆனந்தனே.**

அசைவற்ற மெய்யறிவும் குற்றமற்ற பேரின்பத் துறவியுமாகவுள்ள சரவணபவானந்தனே! துக்கம் ஒழிய வேண்டும் என்றால் உடம்பு என்றுள்ள பற்று ஒழிய வேண்டும்; முதல் பற்றான இது ஒழிய வேண்டுமானால் எல்லா வினைகளும் செத்தொழிய வேண்டும்; அவை ஒழிய வேண்டுமெனில் இராகம், துவேஷம் முதலியவற்றை விட வேண்டும்; அவை தாம் விடுதற்குக் கெட்ட பற்றைத் தொலைக்க வேண்டும்; அது போக வேண்டுமாயின் பொய்யான அறியாமை ஒழிய வேண்டும்; அது ஒழியவென்னில் அஞ்ஞானம் என்னும் இருள் நீங்கி ஒழிய வேண்டும்; அது போகவென்னில், ஆன்ம இன்ப அறிவு உதிக்க வேண்டும். தகுந்த புகழுடைய என் அப்பனே! இதை நான் இனிச் சார்வது உன் திருவருளை நீங்கியோ? கூறியருள்வாயாக!

### இக்கட்டுரையின் நோக்கம்:

சுவாமிகள் மேற்கூறிய தவறுகள் ஏதேனும் செய்தாரா? இல்லை. இக்கட்டுரையின் சுருக்கத்தை ஒரு உதாரணம் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

ஞான பக்குவத்தை அடைதற்கு முயல்பவன் காமம் முதல் அகங்காரம் வரையில் உள்ள பதினான்கு தீவினைகளையும் விடக்கடவன். பதிஞானப் பலன் ஆனது விவசாயிக்கு முன்னர்த் துன்பமும் பின்னர் இன்பமும் உண்டாதல் போல் பொருந்துவதாகும். விவசாயி நிலத்தைப் பலமுறை உழுது கடினமாயுள்ள மண்ணைப் புழுதி போல் மென்மையாக்குவன். பாத்தி கட்டுவன், பயிர் உரம் இடுவன்; விதை விதைப்பன்; முறைப்படி நீர்பாய்ச்சுவன்; பயிர் வளரும்; அதனுடன் களையும் வளரும்; களையை வேரொடு பறிப்பான்; தோட்டத்திற்கு வேலி அமைத்துக் களையும் வளரும்; களையை வேரோடு பறிப்பான்; தோட்டத்திற்கு வேலி அமைத்துக் கண்ணினைக் காக்கின்ற இமையைப் போலப் பயிரைக் காத்து வருவன்; இறுதியில் தனக்கும் தன் குடும்பத்தார்க்கும் ஏன் இந்த பாரதத் திருநாட்டிற்கும் போதிய உணவுப் பொருளைப் பெறுவான். உழவனின் நெற்றி வியர்வை நிலத்தில் விழக் கடும் வெயிலையும் பெரும் மழையினையும் கொடும் பனியினையும் பொருட்படுத்தாமல் உழைக்கின்றனன். உணவு தானியம், காய்கறி, கிழங்கு முதலானவற்றை கள்வர் களவுசெய்து விடாமலும் இரவு பகலாகக் காக்கின்றனன். அவன்படும் அல்லலைச் சொற்களால் விளக்க இயலாது. இத்தனை துன்பத்தையும் அனுபவித்த பின்பு பலனைப் பெறுகின்ற போது, அதை எல்லாம் மறந்து இன்பம் அடைகின்றான்.

மனத்தாலும் வாக்காலும், மெய்யாலும் எவ்விதத் தீமையும் செய்யாமல் மெய், வாய், கண், மூக்கு, செவி எனும் ஐம்புலன்களையும் அடக்கித் தவத்தைச் செய்கின்றவன் முன்னே துன்பமும் பின்னே இன்பமும் அந்த உழவனைப் போல அடைகின்றான் என்பது சுவாமிகள் வாக்கு. ஆக மொத்தத்தில் நாம் இறைவனிடம் வேண்டி இகபர சௌபாக்கியம் பெறுகின்றோம் என்ற நோக்கில் பல்வேறு பாபங்களைச் செய்கின்றோம். இவையெல்லாம் நாம் தெரிந்தோ அல்லது தெரியாமலோ செய்கின்றோம். ஆகையால் நாம் பெரிதும் இறைவனிடம் வேண்டுவது திருவடி சௌக்கியமாக மட்டுமே இருக்க வேண்டும்.

வைஷ்ணவ அடியாராகிய குலசேகர ஆழ்வார் பெருமாளை நோக்கி “படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனோ’ என்ற வரத்தைப் பெற்றார். இன்னும் பெருமாள் கோயில்களில் கருவறைக்கு முன்பாக உள்ள படிக்கட்டை குலசேகரஆழ்வார் படி என்றே அழைக்கின்றார்கள். அதுமட்டும் அல்லாமல் வருடந்தோறும் அந்தப் படிக்கு சிறப்பு பூஜைகள் பெருமாள் கோயில்களில் செய்யப்படுகின்றன. 63 நாயன்மார்களும், இல்லறத்திலே இருந்தாலும் அவர்கள் பல ஆன்மிக தர்மச் செயல்களை செய்ததால் சிவபெருமான் அவர்களுக்கு காட்சி கொடுத்து அருள்புரிந்தான். ஆக இவர்கள் வேண்டுவது திருவடி சௌக்கியமே. இதுவே நமக்கு நிரந்தரம் ஆகும்.

இந்தப் பாடலாகிய சரவணபவானந்தன் கேட்க விரும்பும் மெய்யன்பர்கள் www.pambanswamigal.net என்ற இணையதளத்தில் சென்று முதல் மண்டலத்தில் 17 வரிசையை கிளிக் செய்தால் பாடல் கேட்டு ரசிக்கலாம். பாடல் வரி வடிவம் சுவாமிகள் எழுதிய மூலம் அல்லது பதம் பிரித்து எழுதிய பிரதி எது வேண்டும் என்று விரும்பும் மெய்யன்பர்கள் சண்முககவசம் ஆசிரியரை அணுகினால் தங்களுக்கு இலவசமாக அப்பாடல் நகல் எடுத்து அனுப்பப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## ஆன்மிகப் பாதையில் செல்லும் சண்முக கவசம் படிக்கும் நேயர்களுக்கு ஒரு புதிய நற்செய்தி

சண்முக கவசம் இதழில் வரும் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் செய்திகள் தாங்கள் எப்போது வேண்டுமானாலும் படித்துக் கொள்ள இன்றைய விஞ்ஞானத் துறையில் மிகப் பெரிய வசதியை நாம் பெற்றுள்ளதால் இனிமேல் தாங்கள் கீழ்வரும் இணைய தளத்தில் படித்துத் தெரிந்துகொள்ள நமது குழுக்களில் உள்ள ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் திருப்பள்ளியெழுச்சி மன்றம் இதைச் செய்ய முன் வந்துள்ளது என்பதை நாங்கள் தங்களுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அந்த இணைய தளத்தின் பெயர் பின்வருமாறு :

**www.pambanswamigal.net (or) www.pambanswamigal.org**

மேலும் விவரங்களுக்கு : **Email: thiruppalli@yahoo.com or 94449 58526**